வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 1 of 2023

வழக்கு சாட்சி – PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தனசேகர் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | தொழில் | : | Packing Cover Manufacture |
| கிராமம் | : | மேற்கு பல்லடம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.10.2023.
(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 16.10.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு Packing Cover Manufacture வேலை செய்து வருகிறேன். கடந்த 19.09.2022 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு பல்லடம்–பொள்ளாச்சி ரோட்டில் உள்ள தாலுக்கா அலுவலத்திற்கு அருகில் நானும் எனது நண்பர் விஜி என்பவரும் சென்று கொண்டிருந்தோம். அப்போது போலீசார் தாலுக்கா அலுவலகம் எதிர்புறம் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். நான் என்னவென்று சென்று பார்த்தபோது காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அங்கு முந்தைய நாள் நடந்த விபத்தில் இரண்டு பெண்கள் இறந்துவிட்டதாக அந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், விஜி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில்உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடைது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. எதிரி ஆஜர். எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக போதிய வாய்ப்பு அளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை : இல்லை

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.10.16 21:37:31 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.